**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No.**40/2013

**Date:**16.11.2021 **DW.1**(ஏகப்பன்)

**வாதி தரப்பு கு.வி தொடர்ச்சி:**

நான் திடீர் நகர் காவல் நிலையத்தில் 01.01.2011-ம் தேதியன்று கொடுத்த புகாரான வா.சா.ஆ.29-ல் என் தாயார் இறந்த பிறகு நான் பராமரித்து வந்து வாடகைத் தொகையை வாங்கி என் தகப்பனாரிடம் கணக்கு எழுதி தொகையை சமர்பித்து வருகிறேன் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அதேபோல் தாவா பி செட்டியூல் 2-வது இலக்கச் சொத்தினைப் பொறுத்து எங்களுக்கு சொந்தமான மதுரை டவுன், நன்மை தருவார் கோவில், அரிசிக்கார தெரு, டோர் எண்:53 என்ற கதவிலக்க வீடு உள்ளது என்று வா.சா.ஆ.29-ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.29-என்பது நான் வாதி மீது திடீர் நகர் காவல் நிலையத்தில் 01.01.2011-ம் தேதியன்று தாவா பி செட்டியூல் 2-வது இலக்கச் சொத்தினைப் பொறுத்து கொடுத்த புகார் என்றால் சரிதான். அதனால் தாவா பி செட்டியூல் 2-வது இலக்கச் சொத்து பொதுக் குடும்பச் சொத்து என்பதால் தான் அந்த வீட்டின் வாடகையை வசூல் செய்து, அதற்கான கணக்கினை 1-ம் பிரதிவாதியான என் தகப்பனாருக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். அன்றைய தேதி வரை என் தாயார் எனக்கு எழுதி வைத்த பி.வா.சா.ஆ.7 உயிலைப் பற்றி எனக்குத் தெரியாததால் நான் அந்த வீட்டின் வாடகையை என் தகப்பனாருக்கு அனுப்பி, அதற்கான கணக்கினையும் என் தகப்பனாருக்கு கொடுத்து வந்தேன். என் தாயார் எனக்கு எழுதி வைத்த பி.வா.சா.ஆ.7 உயில் எப்போது எனக்குத் தெரிய வந்தது என்றால் அது எனக்கு சரியாக ஞாபகமில்லை. என் தாயார் எனக்கு எழுதி

வைத்ததாக சொல்லும் பி.வா.சா.ஆ.7 உயிலைப் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். ஆகவே அந்த பி.வா.சா.ஆ.7 உயிலை எந்தச் சூழ்நிலையில் அவர் எழுதி வைத்தார் என்று எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.7 உயிலினை யார் சொல்லி என் தாயார் எழுதி வைத்தார் என்பதோ, யார் அந்த உயிலுக்கு வாசகம் சொன்னார் என்பதோ எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.7 உயிலில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு ஞாபகமில்லை. அந்த உயில் எழுதிய பிறகு யார் கைவசம் இருந்தது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. என் தாயார் அந்த உயிலை என்னிடம் நேரடியாகக் கொடுக்கவில்லை. அந்த உயிலினை என் அம்மா, என் அப்பாவான 1-ம் பிரதிவாதியிடம் கொடுத்து வைத்திருந்தாரா என்றால் தெரியாது. அந்த உயிலினை யார், எப்போது என்னிடம் கொடுத்தார்கள் என்பதும் எனக்கு ஞாபகமில்லை. அந்த உயில் எழுதப்படும் காலத்தில் என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதி இந்தியாவில் தான் இருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள் வா.சா.ஆ.30 முதல் 33-ல் உள்ள பாஸ்போர்டில் என் தாயார் எழுதி வைத்ததாகச் சொல்லும் பி.வா.சா.ஆ.7 உயில் எழுதப்பட்ட காலத்தில் என் தகப்பனார் இந்தியாவில் தான் இருந்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தாயார் எழுதி வைத்ததாகச் சொல்லும் பி.வா.சா.ஆ.7 உயிலின் தேதி எனக்கு ஞாபகமில்லை. அந்த உயில் கையால் எழுதப்பட்டதா, டைப் செய்யப்பட்டதா என்பதும் எனக்கு ஞாபகமில்லை. அந்த உயிலினை என் தாயார் எனக்கு எழுதி வைப்பதற்கு முன்னால் அது சம்மந்தமாக என் தாயார் என் தகப்பனாரான 1-ம் பிரதிவாதியிடம் கலந்து பேசி ஆலோசித்தாரா என்றால் அது எனக்குத் தெரியாது. அவ்வாறு ஒரு உயிலினை தான் எழுதி வைத்திருப்பதாக என்

தாயார் உயிருடன் இருந்த காலத்தில் என் தகப்பனாரிடம் தெரிவித்திருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. அந்த உயில் என் தாயாரால் எழுதி வைக்கக் கிடையாது என்றும், பி.வா.சா.ஆ.7 உயிலில் உள்ள கண்ணாத்தாள் என்று உள்ள கையெழுத்துக்கள் என் தாயாரின் கையெழுத்துக்கள் இல்லை என்றும், அது என்னால் என் தாயார் இறந்த பிறகு உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொய் ஆவணம் என்றால் அது தவறு. பி.வா.சா.ஆ.7 உயில் மோசடியானது என்றும், அதன் உண்மைத்தன்மையை அறிய கைரேகை நிபுணருக்கு அனுப்பி அவரின் அபிப்ராயத்தினை பெற வேண்டும் என்று வாதி இந்த வழக்கில் இ.ம.எண்:56/2016 என்ற இடைமனுவினை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த உயிலினை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பக் கூடாது என்று ஆட்சேபித்து எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது எனக்கு ஞாபகமில்லை. தற்போது நான் பி.வா.சா.ஆ.7 உயிலின் உண்மைத் தன்மை அறிய அந்த உயிலினை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. அது கையெழுத்து நிபுணருக்கு அனுப்பப்பட்டால் பி.வா.சா.ஆ.7 உயிலில் உள்ள கண்ணாத்தாளின் கையெழுத்துக்கள் என் தாயாரின் கையெழுத்துக்கள் இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால் வாதி தாக்கல் செய்த அந்த மனுவை நான் கடுமையாக ஆட்சேபித்ததோடு, தற்போது வரை அந்த உயிலின் உண்மைத் தன்மையை நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அந்த உயிலினை அனுப்ப நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாருக்கும், தாயாருக்கும் எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் ஞாபகமில்லை. என்

தாயாரின் தகப்பனார் பெயர் அண்ணாமலைச் செட்டியார். அவர் நாட்டரசன்கோட்டையில் சைக்கிள் கடை வைத்திருந்ததால் அவரை சைக்கிள் கடை அண்ணாமலைச் செட்டியார் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். அவருக்கு மொத்தம் 11 குழந்தைகள் என்று சொன்னால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. அதில் முதல் குழந்தை தான் என் தாயார் என்றால் சரிதான். என் தாத்தா அண்ணாமலைச் செட்டியாருக்கு சொந்த வீடு கூட கிடையாது என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தாயாரின் திருமணத்தின் போது அவருக்கு அவரின் பெற்றோர் வீட்டிலிருந்து எத்தனை பவுன் நகைகள் கொடுத்தார்கள் என்பதும், எவ்வளவு சீர் பணம் கொடுத்தார்கள் என்பதும், எவ்வளவு சீர் வரிசை சாமான்கள் கொடுத்தார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. என் தாயாருக்கு பெண் குழந்தைகள் கிடையாது. என் தாயாருக்கு அவரின் பெற்றோர் வீட்டில் கொடுத்த சீர் வரிசை சாமான்கள் தற்போதும் தாவா 1-வது இலக்கச் சொத்திலுள்ள வீட்டில் இருக்கிறதா என்றால் தெரியாது. என் தாயார் எத்தனை பால்மாடுகள் வைத்திருந்தார் என்பது ஞாபகமில்லை. அதன்மூலம் எத்தனை லிட்டர் பால் கரக்கப்பட்டது, எவ்வளவு வருமானம் வந்தது என்பது எனக்குத் தெரியாது. நாட்டரசன்கோட்டையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கள் இருக்கிறதா என்றால் தெரியாது. எதாவது ஒரு சங்கத்தில் என் தாயார் உறுப்பினராக இருந்தாரா என்றால் தெரியாது. பால்மாடுகளைப் பராமரிப்பதற்கு பண்ணை ஆட்களை என் தாயார் அமர்த்தி வைத்திருந்தாரா என்றால் தெரியாது. எந்த வருடம் வரை பால் மாடுகள் எங்கள் வீட்டில் இருந்தது என்பதும் எனக்குத் தெரியாது. என் தாயாரின் வருமான வரி கணக்குகளில் என் தாயார் செய்து வந்ததாக சொல்லும் பால் வருமானத்தில் வந்த வருமானம் காட்டப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு

ஞாபகமில்லை. என் தாயாரை, என் தகப்பனார் திருமணம் செய்தபோது அவர் மாமனார் வீட்டிலிருந்து எந்த நகையோ, சீர் வரிசைப் பணமோ பெற்றுக் கொள்ளாது, திருமண முழுச்செலவையும் 1-ம் பிரதிவாதியே செய்து என் தகப்பனார், என் தாயாரை திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தாயார் அவர் திருமணத்திற்குப் பிறகு அவரின் சகோதர, சகோதரிகளை எங்கள் வீட்டில் வைத்து பராமரித்து திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தாயாரிடம் இருந்த பணம் முழுவதும் என் தகப்பனார் மலேசியாவிலிருந்து அனுப்பிய மற்றும் கொண்டு வந்த பணங்கள் என்றும், பொதுக்குடும்பத்தில் நடத்தி வைத்த மணி லென்டிங் தொழிலை என் தகப்பனார் மலேசியாவில் இருந்த காலங்களில் அந்த மணி லென்டிங் தொழிலை என் தாயார் மேற் பார்த்து வந்த வகையில் கிடைத்த வருமானங்கள் என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் பால் மாடு வைத்திருக்கவும் இல்லை என்றும், பால் வியாபாரம் செய்யவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயாருக்கு, என் தகப்பனார் மூலம் உள்ள பணங்கள் தவிர என் தாயாருக்கென்று தனிப்பட்ட வருமானம் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா பி செட்டியூல் 1-வது இலக்கச் சொத்தினை என் தாயார் பெயரில், என் தகப்பனார் தான் வாங்கினார் என்றால் சரியல்ல. அந்த இடம் மனையிடமாகத் தான் வாங்கப்பட்டது. அந்த இடம் வாங்கி எத்தனை வருடம் கழித்து அதில் வீடு கட்டப்பட்டது என்றால் ஞாபகமில்லை. எவ்வளவு ரூபாய்க்கு கட்டப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அந்த வீடு கட்டுவதற்கான பணம் என் தகப்பனார் பணம் என்றால் தெரியாது. அந்த வீடு கட்டி முடித்து கிரகபிரஷேத்திற்கு என் தகப்பனார் வந்து கலந்து கொண்டார் என்று சொன்னால் ஞாபகமில்லை. தாவா பி செட்டியூல் 1-வது

இலக்கச் சொத்து மனையிடம் வாங்கிய பணமும், அதில் வீடு கட்ட செலவழித்த பணமும் என் தகப்பனாருக்கும், எங்களுக்கும் உள்ள பொதுக் குடும்பப் பணம் என்றும், எங்கள் தாயாருக்கு அந்த இடத்தினை வாங்குவதற்கும், அதில் வீடு கட்டுவதற்கும் தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றும், என் தகப்பனார் மலேசியாவில் இருந்த காரணத்தால் பொதுக் குடும்ப பணத்தினைக் கொண்டு என் தாயார் பெயரில் கிரையம் வாங்கப்பட்டு, பொதுக்குடும்ப பணத்திலிருந்து வீடு கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா பி செட்டியூல் 2-வது இலக்க மதுரையிலுள்ள நன்மை தருவார் கோவிலுக்கு அருகிலுள்ள வீடு எந்த வருடம் வாங்கப்பட்டது, எவ்வளவு ரூபாய்கு வாங்கப்பட்டது, யார் பணத்தில் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. அந்த வீட்டினுடைய வாடகையை என் தகப்பனார் தான் வாங்கி வந்தார் என்றால் இல்லை. எவ்வளவு வாடகை வந்தது என்றால் தெரியாது. அந்த பி செட்டியூல் 2-வது இலக்க வீடு பொதுக் குடும்ப தொகையிலிருந்தும், என் தகப்பனார் மலேசியாலிருந்து அனுப்பிய தொகைக்கு கொண்டும், என் தகப்பனார் அந்த நேரத்தில் மலேசியாவிலிருந்ததால் என் தாயார் பெயருக்கு பெயர் ராசிக்காக கிரையம் வாங்கப்பட்டு பொதுக் குடும்பச் சொத்தாகவே இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).